

J.D.C.S.I

# மூளாய் திருச்சபை
# 125 வது ஆண்டு நிறைவு மலர்


23.03.1880

23.03.2005

# மூளாய் திருச்சபை

## 125 வது ஆண்டு

## நிறைவு மலர்



நமது பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன்,
திருமதி விமலா ஜெபநேசன்

# முகவுரை

.............................." இவ்வுலகத்திலே நிலையற்ற ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கையாயிராமல் நாம் அனுபவிக்கின்றதற்குச் சகலவித நன்மை களையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கின்ற ஜீவனுள்ள தேவன் மேல் நம்பிக்கை வைக்கவும். நன்மை செய்யவும். நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுக்கின்றவர்களாகவும், உதார ணமுள்ளவர்களாயும், நித்திய ஜீவன் பற்றிக்கொள்ளும்படி வருங் காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக் கவும் அவர்களுக்குக் கட்டளையிடு ........ தீமோத்தேயு 6:17,18,19 வசனங்களிற் பவுலடிகளார் கூறிய வண்ணம் கடந்த 125 ஆண்டுகள் கடவுள் இந்த சபையாருக்குக் கொடுத்த ஆசீர்வாதங்களுக்காய் நன்றி சொல்லவும், பின்வரும் சந்ததிக்கு நல்லதோர் ஆதாரத்தைப் பொக்கி ஷமாகவைக்கவும் இந்த ஆண்டு விழா மலரை வெளியிடுகின்றோம். இதனை வாசிப்பவர்கள் ஒரு திருச்சபையின் கடந்த காலத்தையும் எதிர்காலத்தையும் மனதில் வைத்து நிகழ்காலக் காரியங்களை ஆவிக்குரியவர்களாய் மதிப்பீடு செய்வீர்களாக...

**-வண. T.S. யோசுவா -**

## பேராயரின் வாழ்த்து



மூளாய் திருச்சபைக்கு இந்த வருடம் மார்ச் மாதம் 23ந் திகதி 125 வயது பூர்த்தியாகின்றது. பராயமடைந்த மகள் தன்னுடைய பெற்றோர் வீட்டைப் பிரிந்து கணவனோடு தனிக்குடித்தனம் நடத்தச் செல்வதுபோல வட்டுக்கோட்டைத் திருச்சபையோடு இணைந்திருந்த மூளாய் உறுப்பினர்கள் 1880ம் ஆண்டு தமக்கென ஒரு திருச்சபையை உருவாக்கிக்கொண்டனர். ஆரம்பத்தில் இப்பொழுது உள்ள தேவால யத்திற்கு முன்னுள்ள வளவிலேதான் ஆலயம் அமைந்திருந்தது. பின்னர் இப்பொழுதுள்ள இடத்தில் வழிபாடு நடாத்தப்பட்டது. இந்த மாற்றத்திற்குப் பின்னால் ஓர் இனிய காதல் கதையும் இருந்ததாக நான் சிறுவனாக இருந்தபொழுது கேள்விப்பட்டேன்.

மூளாயில் சிறப்பு வாய்ந்த ஊழியர்களும், கல்வியிற் சிறந்த அங்கத்தவர்களும் இருந்திருக்கிறார்கள். யாழ்ப்பாணக் கல்லூரியிற் பேராசிரியராகவிருந்த G.D. தொமஸ் அப்பதவியைத் துறந்து கிறிஸ்தவ ஊழியனானார். அவர் முதன் முதல் பணியாற்றிய திருச்சபை மூளாயாகும்.

அப்பொழுது இருந்த அங்கத்தவர்களில் ஒருவர் Robert Breekenridge என்பவராகும். இவர் இலங்கையின் அரைவாசிப் பகுதிக்கு வித்தியாதரிசியாக இருந்தவர். "இயேசு நேசிக்கிறார்" என்ற பாடலை இயற்றியவர் இவரேயாவார்.

1955ம் ஆண்டு எனது தகப்பனார் வண. N. சுப்பிரமணியம் இத்திருச்சபையின் பொறுப்பை ஏற்றார். அக்கால முதல் 1963ம் ஆண்டு அளவெட்டிக்கு மாற்றலாகச் செல்லும்வரை மூளாய் ஊழியனாகவும், தொல்புரம் பாடசாலையின் தலைமை ஆசிரியராகவும் இருந்தார். என் உள்ளத்தில் ஏற்பட்ட பதிவுகளை Dr. M.O. சாக்கோ, "மூளாய் வாசம் சில நினைவுகள்" என்ற கட்டுரைகளில் எழுதியுள்ளேன். அவை இந்தப் பிரசுரத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரிக்கு அடுத்ததாக என் உள்ளத்திலே இனிய நினைவு களை உருவாக்கியது மூளாயாகும். நானும் எனது சகோதரர்களும், சகோதரியும் பல்கலைக்கழகங்களுக்கும், மருத்துவக் கல்லூரிக்கும்

சென்றது. மூளாயிலிருந்துதான். மூளாய் அமெரிக்கன் மிஷன் தமிழ் பாடசா லையில்தான் நாம் இரவு பகலாகப் படித்தோம். அப்பொழுது மின்சாரம் இல்லை, அரிக்கன் விளக்கு ஒன்றினைத் தூக்கிக்கொண்டு இப்பாடசாலைக்குச் செல்லுவோம். இரவு 11 மணி வரையும் இப் பாடசாலையிலேயே இருந்து படித்தோம். அப்பொழுது அப்பாடசாலையின் தலைமை ஆசிரிய ராக இருந்தவர் திரு. K.S. யோசேப் (வண. யோசேப் சர்வானந்தனின் தகப்பனார்) தலைமை ஆசிரியரின் மேசையும், கதிரைகளும் மிகச் சிறப்பானவை. அந்த இடத்தைப் பிடிப்பதற்குத்தான் போட்டி யிருக்கும்.

மூளாய் இப்பொழுது பெரும் மாற்றங்களைக் கண்டுள்ளது. ஆனால் இந்த மாற்றங்கள் நடைபெற்றபொழுதிலும் மூளாய்த் திருச்சபையைக் கண்ணும் கருத்துமாகக் காப்பாற்றி வருபவர்கள் திரு. S.J. கந்தையா ஆசிரியரின் சந்ததியினராகும். அவர்கள் எல்லோருக்கும், குறிப்பாகத் திரு. க.அருமைநாயகம் அவர்களுக்கு எனது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பொழுது மூளாய் திருச்சபையைப் பார்க்கின்றபொழுது ஆண்ட வர் இயேசு கிறிஸ்துவின் வசனம் ஒன்றே எனக்கு ஞாபகத்திற்கு வருகின்றது.

> **"கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலும்**
> **ஜனங்கள் வந்து கடவுள் ராஜ்யத்தில் பந்தியிருப்பார்கள்.**
> **பிந்தியோர் சிலர் முந்தியோராவர். முந்தினோர்**
> **சிலர் பிந்தினோராவர்"** **- லூக்கா 13:29,39 -**

இப்பொழுது வண. T.S. யோசுவா இத்திருச்சபையின் பொறுப்பை யேற்று நடாத்தி வருகின்றார். இவர் துடிப்புள்ள வாலிபன். இவருடைய காலத்தில் மூளாய்த் திருச்சபை மேலும் வளரும் என எதிர்பார்க்கலாம்.

> **"இந்த ஆலயத்தின் மேல் உம்முடைய**
> **கண்கள் இரவும் பகலும் திறந்து**
> **இருப்பதாக. உமது அடியானும்**
> **இந்த ஸ்தலத்திலே விண்ணப்பம்**
> **செய்யப் போகிற உமது சனமாகிய**
> **இஸ்ரவேலும் பண்ணும் செபத்தைக்**
> **கேட்டருளும்."** **- இரா: 29-30 -**



# வண. பொ. றெ. நவேந்திராஜகூலன்

## பிரதம பேராயரின் ஆணையாளர், வட்டுக்கோட்டை

மூளாய் தென்னிந்தியத் திருச்சபை இம்மண்ணில்; 125 வருட நீண்ட பயணத்தில் இறைபணி புரியக் கிடைத்த ஆண்டவரின் கிருமைக்காக நன்றி கூறி, இத்திருச்சபையின் சேவையை வாழ்த்தி ஆசிச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்.

“திருச்சபை கிறிஸ்து நாதரில் வேருன்றியிருக்க வேண்டும்; அந்தந்தப் பண்பாட்டிற்குப் பொருத்தமானதாகவும் இருக்க வேண்டும்” என்பது இன்று வலியுறுத்தப்படும் உண்மை. மூளாய் திருச்சபை இவ்வுண்மையின் ஒரு சின்னமாக மிளிருகிறது.

32 ஊழியர்களும், உபதேசிமார்களும், ஆன்மிகத்துக்கும், சமுதாயப் பணிக்கும் ஆற்றிய தொண்டு கடந்த 125 ஆண்டுகளாக மங்காது திருச்சபை தொடர்ந்தும் திருப்பணியாளர்களுக்கூடாக புத்துயிர் பெற்று, காலத்தின் தேவைகட்கு ஏற்ப பணிகள் விரிவுபடுத்தப்பட்ட வேண்டுமென எமது ஆதீனத்தின் சார்பில் வாழ்த்தும், மகிழ்ச்சியும் தெரிவித்து இறையாசியை வேண்டுகின்றேன்.

“நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று, தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும் அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.”



# திருச்சபைக் குருவின் வாழ்த்து

மூளாய்த் திருச்சபையின் 125வது ஆண்டு விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதன் மூலமாக ஒரு திருச்சபையின் சரித்திரத்திற் கடவுள் என்னையும் பங்காளியாக்கினார் என்பதில் கடவுளுக்கு நன்றி செலுத்துகின்றேன். மூளாய் திருச்சபை நீண்ட வரலாற்றை யும் அந்த வரலாற்றினுள் பல விசுவாச வீரர்களையும் சுமந்து வந்த ஒரு திருச்சபையாகும். நான் 2004ம் ஆண்டு மே மாதம் இந்தத் திருச்சபையைப் பொறுப்பேற்ற நாட்கள் நான் மீளவும் நினைவுபடுத்தி அந்நாட்களில் திருப்பணியில் எவ்வகையில் இந்தச் சபைக்குக் கடவுள் என்னைப் பயன்படுத்தவேண்டு மென நினைத்தேனோ அந்த வகையிற் கடவுள் என்னை வழிநடத்தி வருகின்றார் என்பதையும் நினைத்து எதிர்காலச் சந்ததிக்கு சிறந்ததோர் விசுவாச வாழ்க்கையை கையளிக்கத் தக்கதான ஒரு விசுவாச சமூகத்தைத் தொடர்ச்சியாக வழிநடத்திச் செல்ல என்னை அர்ப்பணிக்கின்றேன்.

மூளாய் திருச்சபை கடந்த நாட்களிற் பல கடினமான பாதைகளில் அனுபவங்களுக்கூடாகவும் கடந்த பொழுதிலும் கடவுள் தமது திருச் சபையை ஆளுகை செய்கிறார் என்பதை உலகு அறியத்தக்கதாக அதனைக் கடவுள் தொடர்ச்சியாக மனநிறைவும் மகிழ்ச்சியுமான வழி நடத்தலுக்குள்ளாக வழி நடாத்தி வருகின்றார்.

அன்பும் மதிப்பும் மிக்க சபையினர், அழகான ஆலயம், சிறப்பான இயற்கை வளர்ப்புமிக்க சூழல் இவை. எல்லாவற்றிற்கும் மேலாகச் சிறந்த பாரம்பரியத்தைக் கொண்ட வரலாறு: இவையாவும் இத்திருச்சபையின் எதிர்காலவாழ்வுக்கும், வளத்திற்கும் மங்காத ஒளியை கொடுக்கக் கடவுள் தமது பிரசன்னத்தை எப்போதும் இந்தத் திருச்சபை மீது வைத்துள்ளார் என்ற சிறந்த நம்பிக்கையுடன் சபையார் யாவருக்கும் எனது வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ("ஆகையால் நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே அவருக்குள்வேர் கொண்டவர் களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாக வும், அவருக்குள் நடந்து கொண்டு நீங்கள் போதிக்கப்பட்டபடியே விசுவாசத்தில் உறுதிப்பட்டு ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக."

**கொலோசேயர் 2:6,7**

**இங்ஙனம்**

**வண T.S. யோசுவா**



# GREETINGS ON THE OCCASION OF THE 125TH ANNIVERSARY OF MOOLAI CHURCH

I am happy to convey my warmest greetings to the present pastor Rev. T.S. Joshua and the members of the parish of Moolai C.S.I. Church, Jaffna College has great, long standing ties with this church. Rev. Hastings, an earlier principal of the College had made enormous contributions towards building up the life of this church. Contributions of this nature is still evident in the history of this church.

A church in a society is a great source of strength, and it brings about a unity among the people who join in the worships and the Life of each individual. Based on this principle we the College community extend our good wishes and prayers in the fervent hope that this parish will grow more and more in faith and act as a guiding community so that our Lord's name be glorified in all the work done by the pastor and the members of the parish. In God's eyes, true greatness is serving others.

NOEL. A VIMALENDRAN
PRINCIPAL
JAFFNA COLLEGE
VADDUKODDAI.

# திருச்சபை வரலாற்றுப் பார்வை

19ம் நூற்றாண்டு அமெரிக்காவில் எழுந்த பக்தி இயக்க மறுமலர்ச்சியினால் ஏற்பட்ட சுவிசேட வாஞ்சை "The American Board of commissioners for Foreign missions" என்ற சங்கம் 1810 ஆண்டில் உதயமாயிற்று. அந்த மிஷன் சங்கத்தில் இருந்து வந்த மிஷனரிமாரின் முதல் தொகுயினர் முதலில் யாழ்ப்பாண மாவட்டத்தின் தெல்லிப்பழைப் பகுதியில் 1816ம் ஆண்டுப் பகுதியிற் பணியாற்றத்தொடங்கினார்கள். அங்கிருந்து கொண்டே அவர்கள் 1831ம் ஆண்டுக்குள் வட்டுக்கோட்டை, உடுவில், மானிப்பாய், பண்டத்தரிப்பு போன்ற இடங்களிற் சபைகளை ஸ்தாபித்தார்கள்.

1831ம் ஆண்டுக்குள் உருவாக்கப்பட்ட வட்டுக்கோட்டைத் திருச்சபையினரின் வாஞ்சையும், மிஷனரிமாரின் பிரயத்தனமும், தேவகிருபையும் அயல் கிராமங்களிற் சுவிசேடப் பணியை அதிகமாய் செய்யத்தூண்டியது. இதன் விளைவாக மூளாய், காரைநகர், அராலி போன்ற பகுதிகளில் இருந்து மக்கள் தெய்வ நம்பிக்கையில் வேரூன்றி வட்டுக்கோட்டைத் தேவாலயத்தில் வழிபாட்டுக்கு வரத்தொடங்கினார்கள். காலம் செல்லச் செல்லச் சபையாரின் பெருக்கம் அதிகரிக்க 1955ம் ஆண்டு காரைநகரில் ஒரு திருச்சபை உதயமாயிற்று. 1880ம் ஆண்டு மூளாயில் ஒரு திருச்சபை உதயமாயிற்று.

1880ம் ஆண்டு பங்குனி மாதம் 23ம் நாள் வண. S.ஜோன் அவர்களின் தலைமையில் மூளாயில் தற்பொழுது ஆலயம் அமைந்திருக்கும் பகுதிக்கு முன்பாகவுள்ள ஒரு வீட்டில் வழிபாடு ஆரம்பமானது. வழிபாட்டிற் கலந்து கொண்டவர்கள் விபரம் வருமாறு:

ஆண்கள்

01. Breckenridge Robert
02. Thampapilly George
03. Neill John
04. Araham Velupillai
05. Arut Piragasam Sinapodi
06. Samuvel Komanathan
07. Poor Daniel Sinakutti
08. S. John Sankarapillai
09. John Naganathar
10. Heary Vellupillai

பெண்கள்

01. Benckeniridge Elizabeth
02. Dana Sara
03. Delia Rither. C. John
04. Mary Dana

வண. S. ஜோன் அவர்கள் 1898 வரை தேவ ஊழியனாகக் கிராமக பணியாற்றினார்.

01. 1898ம் ஆண்டு வட்டுக்கோட்டையிலிருந்து அமெரிக்க மிஷனரி R.C. Hasting சபையின் பொறுப்பை ஏற்றார். இவருடைய காலத்தில் திருச்சபை மேலும் மேலும் வளரத் தொடங்கியது. 1906ம் ஆண்டு வரை இவர் சிறப்பாகப் பணியாற்றினார்.

02. 1906ம் ஆண்டு கனம் அல்பேட் கந்தையா இத்திருச்சபையின் பொறுப்பை ஏற்றார். இவருடைய காலத்தில்தான் மூளாய் தேவாலய மும் கட்டி முடிக்கப்பட்டது. இவரது காலத்திற் சாள்ஸ் முருகேசு என்பவர் உபதேசியராக இருந்தார்.

03. 1917ஆம் ஆண்டு வண. S.D. தொமஸ் இச்சபையின் பொறுப்பை ஏற்றார்.

**மூளாய் பதிவேட்டில் பின்வரும் குறிப்பு காணப்படுகின்றது**

**வைகாசி 1917**

**"என் கிருபை உனக்குப் போதும் என்ற**
**இரட்சகர் வாக்கைநம்பி வைகாசி மாதம்**
**மூளாய் சபையின் பொறுப்பை ஏற்றேன்"**

G.S. Thomas

04. 1918ம் ஆண்டு G.D. தொமஸ் போதகர் நவாலிக்கு மாற்றப்பட்டார். P.V. வைத்திலிங்கம் என்ற உபதேசியார் சபையின் பொறுப்பை ஏற்றார்.

05. 1922 K.S. இளையதம்பி உபதேசியார் சபையின் பொறுப்பை ஏற்றார்.

06. 1925ம் ஆண்டு C.W.K. DANFORTH உபதேசியார் திருச்சபையின் பொறுப்பை ஏற்றார்.

07. 1926ம் ஆண்டு C.H. குக் என்பவர் சபையின் பொறுப்பை ஏற்றார்.

08. 1927ம் ஆண்டு திரு. K.P.L. தேவநாயகம் என்ற உபதேசியார் இச் சபையின் பொறுப்பை ஏற்றார்.

09. 1932ம் ஆண்டு திரு. E.T. வில்லியம்ஸ் போதகர் இச்சபையின் பொறுப்பை ஏற்றார்.

10. 1939 திரு G. ஆசீர்வாதம் உபதேசிய இத்திருச்சபையின் பொறுப்பை ஏற்றார்.

11. 1943 சின்னண்ணன் யேசுசகாயம் இத்திருச்சபையின் பொறுப்பை ஏற்றார்.

12. 1944 சேகரக் குருவாக இருந்த Rev. A.C. தம்பிராசா இத்திருச் சபையின் பொறுப்பை ஏற்றார். சின்னண்ணன் இயேசுசகாயம் ஆச்சிர மத்திற் பணியாற்றச் சென்றார்.

13. 1945 கென்றி செல்வராஜா உபதேசியார் இத்திருச்சபையின் பொறுப்பை ஏற்றார்.

14. 1946 வண. E.T. வில்லியம்ஸ் சபையின் பொறுப்பை ஏற்றார்.

15. 1951ம் ஆண்டு வண. J.J. இரத்தினராசா சேகரக் குருவாக இத்திருச் சபையின் பணியை ஏற்றார்.

16. 1955 வண. N. சுப்பிரமணியம் இத்திருச்சபையின் ஊழியப் பொறுப்பை ஏற்றார். இவர் 1963ம் ஆண்டு வரை இத்திருச்சபையில் ஊழியம் புரிந்தார். இவரது காலத்திலேதான் சமையலறை மற்றும் உணவு அறை என்பன கட்டப்பட்டன.

<u>அவருடைய காலத்தில் இருந்த சபையினர் பெயர்கள் பின்வருமாறு:</u>

| ஆண்கள் | பெண்கள் |
|---|---|
| டாக்டர். M.O. சாக்கோ | திருமதி க. சுப்பிரமணியம் |
| திரு. N. சுப்பிரமணியம் | செல்வி சாந்தா சுப்பிரமணியம் |
| திரு. S. சுகுணானந்தன் | திருமதிஅண்ணா நாராயணபிள்ளை |
| திரு. S. ஜெபநேசன் | திருமதி லூசியா றிச்சேட்ஸ் |
| திரு. S. ஜெயசீலன் | திருமதி ஹெலன் செல்லப்பா |
| திரு. R.J. கந்தையா | திருமதி சின்னம்மா இம்மானுவேல் |
| திரு. K. தர்மரத்தினம் | திருமதிபொன்னம்மா வேதநாயகம் |
| திரு. K. அருமைநாயகம் | திருமதி அரியமலர் யோசேப்பு |
| திரு. K.S. ஜோசப் | திருமதி தேவருள் பொன்னையா |
| திரு. J. சர்வானந்தன் | திருமதி சூசன் தம்பு |
| திரு. J. தேவானந்தன் | திருமதி பூமணி தம்பிநாயகம் |
| திரு. E.A. தம்பிநாயகம் | திருமதி பூமணி அருமைநாயகம் |
| திரு. A.N. பொன்னையா | திருமதி சற்குணதேவி சுப்பையா |
| திரு. K. பூலோகராசா | திருமதி தங்கம்மா கந்தையா |
| திரு. M.S. செல்லப்பா | திருமதி R. பாலசுந்தரம் |
| திரு. S. தம்பு | திருமதி அற்புதமலர் சரவணமுத்து |
| திரு. K.V. சரவணமுத்து | திருமதி வில்லி உவில்லியம்ஸ் |
| திரு. S.V. அரியம் | செல்வி கதரின் இரத்தினம் |
| திரு. S. தருமராசா | செல்வி ஜெயசீலி ஹென்றி |

17. 1963ம் ஆண்டு திரு. J.S. மார்க்கண்டு இத்திருச்சபையின் பொறுப்பை ஏற்றார்.

18. 1967ம் ஆண்டு திரு. J.C. கனகரத்தினம் இச்சபையின் பொறுப்பை ஏற்றார்.

19. 1972ம் ஆண்டு திரு. W.K. யேசுதாசன் இச்சபையின் பொறுப்பை ஏற்றார்.

20. 1975ம் ஆண்டு அன்னப்பா ஜெயக்குமாரன் இத்திருச்சபையின் பொறுப்பை ஏற்றார்.

21. 1978ம் ஆண்டு சந்திரன் ஆர்னல்ட் இத்திருச்சபையின் பொறுப்பை ஏற்றார்.

22. 1979ம் அண்டு திரு. S.J. மாணிக்கம் இச்சபையின் பிரசங்கியராக ஊழியம் புரிந்தார்.

23. 1984ம் ஆண்டு திரு. மா. தேவதாசன் சபையின் பொறுப்பை ஏற்றார்.

24. 1988ம் ஆண்டு வண. A. ஜெயக்குமார் சபையின் பொறுப்பை ஏற்றார்.

25. 1991ம் ஆண்டு வண. A.A. போல் இத்திருச்சபையின் பொறுப்பை ஏற்றார்.

26. 1996ம் ஆண்டு வண. E.P. புனிதராஜா சபையின் பொறுப்பை ஏற்றார்.

27. 1997ம் ஆண்டு வண. B. தேவதாஸ் திருச்சபையின் பொறுப்பை ஏற்றார்.

28. 1999ம் ஆண்டு வண. D.C. இரட்ணசிங்கம் இத்திருச்சபையின் பொறுப்பை ஏற்றார்.

29. 2002ம் ஆண்டு அருட்சகோ. ஜெயானந்தன் இச்சபையின் பொறுப்பை ஏற்றார்.

30. 2003ம் ஆண்டு வண. S. நடராஜா இச்சபையின் பொறுப்பை ஏற்றார்.

31. 2004ம் ஆண்டு வண. T.S. யோசுவா இந்தத் திருச்சபையின் பொறுப்பை ஏற்றார்.

ஏறக்குறைய 32 ஊழியர்கள் உட்பட இன்னும் பல உபதேசியர் களின் காலத்தின் ஊடாக இந்த 125 வருடங்களாக இந்த திருச்சபையை நடாத்தி வந்துள்ளனர்.



# முன்னாள் ஊழியனின் வாழ்த்து

125வது ஆண்டைக் கொண்டாடும் மூளாய்த் திருச் சபை மக்களிற்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். மூளாய்த் திருச்சபை சிறிதென்றாலும் பல திருச்சபை மற்றும் சமூகத் தலைவர்களை நம் நாட்டுக்கு வழங்கிய பெருமையைக் கொண்டதாகும். இன்றைய எங்களு டைய பேராயர் கூடத் தனது இளமைப் பருவத்தில் மூளாய்த் திருச் சபையிலே வாழ்ந்தவர். அவரும் அவர்களது சகோதரர்களும் மூளாய்த் திருச்சபையிற் கொண்ட அன்பு காரணமாக இத்திருச்சபைக்கான குரு மனையை அமைப்பதற்காகப் பேர் உதவிகளைச் செய்து உள்ளனர்.

நான் என்னுடைய பணியை முதல் முதலில் ஆரம்பித்த இடமும் மூளாய்த் திருச்சபையே. 1975 முதல் 1979 வரை இச்சபையிற் பணியாற்றக் கிடைத்த வாய்ப்பை இட்டு மகிழ்ச்சி அடைகிறேன். திருச்சபை ஊழியம் என்பது எப்படி என்பதை எனக்குக் கற்றுத் தந்ததும் இத்திருச்சபையே. திருச்சபை சிறிதாக இருந்தபோதும் மூளாய்ப் பிர தேசத்தில் ஒரு சிறப்பான சாட்சி மையமாக சுவிசேஷத்தை அறிவிக்கின்ற நிலையமாகச் சிறப்பாகச் செயற்பட்டது. அந்த நாட்களில் தர்மரட்ணம் மாஸ்ரர் குடும்பம், யோசேப் மாஸ்ரர் குடும்பம், அருமைநாயம் குடும்பம், சுப்பையா குடும்பம் மற்றும் மயில்வாகனம் குடும்பம் ஆகியோர்தான் மூளாயில் வசித்து வந்தனர். இக்குடும்பங்களின் பிள்ளைகள் அனைவரும் வாலிபர்களாகவும் ஓய்வுநாட் பாடசாலைப் பிள்ளைகளாகவும் அதே வேளையிற் சபையின் வளர்ச்சிக் கான உடல் ரீதியான பங்களிப்பை முழுமையாக வழங்குவதிலும் முன் நின்றவர்கள். அந்நாட்களில் என்னுடன் சபைக் காரியங்களில் ஈடுபட்ட பெரியவர்கள் பலரும் வாலிபர்கள் சிலரும் ஆண்டவரோடு வசிக்கச் சென்று விட்டார்கள். இங்கிருப்பவர்கள் தொடர்ந்து திருச்சபைக்குத் தமது விசுவாசத் தைக் காட்டி வருவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

தற்போது மூளாய்ச் சபையின் பொறுப்பை ஏற்றிருக்கும் அருட்திரு. யோசுவா அவர்கள் மூளாய்த் திருச்சபையைக் கட்டி எழுப்புவதில் மிகுந்த ஆர்வுமுடன் செயற்படுகின்றார். அவர்கள் முயற்சியாலும் திருச்சபை மக்களுடைய ஒத்துழைப்பினாலும் மூளாய்த் திருச்சபை மீண்டும் புத்துணர்வு பெற்று இறை அரசை மக்களிற்குக் காண்பிக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

125வது ஆண்டைக் காணும் மூளாய்த் திருச்சபை மேலும் பல்லாண்டுகள் இறைவனுக்குச் சாட்சியாக இருக்க வாழ்த்துகிறேன். "சகோதரரே சந்தோஷமாய் இருங்கள் நற்சீர் பொருந்துங்கள். ஆறுதல் அடையுங்கள். வேத சிந்தையாய் இருங்கள். சமாதானமாய் இருங்கள் அப்பொழுது அன்புக்கும் சமாதானத்துக்கும் காரணரான தேவன் உங்களுடனே கூட இருப்பார்"

**- 2 கொரிந்தியர் 13:11 வசனம் -**

**கல்லூரி ஒழுங்கை**
**வட்டுக்கோட்டை.**

**அருட்திரு அன்னப்பா**
**ஜெயக்குமாரன்**



# திருச்சபை மூத்த உறுப்பினரின் வாழ்த்து

காலம்சென்ற அதிபர் சின்னத்தம்பி ஜோன் கந்தையா வினதும், காலம் சென்ற உதவி ஆசிரியர் கறியெற்தங்கம்மாவினது ஏக புத்திரனாகிய கந்தையா அருமை நாயகம் ஆகிய நான் 1925ம் ஆண்டு ஆவணி மாதம் 12ம் திகதி பிறந்தேன். தொல்புரம் அ.மி.த.க. பாடசாலையிற் கல்வியை ஆரம்பித்து 3ந் தரம் சித்தியடைந்து, மூளாய் அ.மி.த.க. பாடசாலையில் எனது 5ம் ஆண்டில் சித்தியடைந்து, யாழ்ப்பாணக் கல்லூரியில் 1935ம் ஆண்டு சேர்ந்து 1945ம் ஆண்டு லண்டன் மற்றிக்குலேசனைப் பூர்த்திசெய்து, 1946ம் ஆண்டு தபால் இலாகாவில் தபாலதிபர் பகுதியிற் சேர்ந்து 1982ம் ஆண்டு தபால் கணக்குப் பரிசோதகர் தரத்தில் இருந்து இளைப்பாறினேன். ஓய்வுபெற்ற பின்னர் மூளாய்த் திருச்சபையின் செயலாளராகவும், பொருளாளராகவும் பதவிகளை வகித்துத் தற்பொழுது பொருளாளராகக் கடமையாற்றி வருகிறேன்.

தற்பொழுது கனம் T.S. யோசுவா அவர்கள் ஊழியராக நியமிக் கப்பட்டதால் அவர் அதிக முயற்சியெடுத்து, திருச்சபையை கட்டியெ ழுப்புகின்றார். அவர் திருச்சபை மக்களை விசுவாச பாதையில் வழிநடத்தச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றார்.

மூளாய் திருச்சபை தற்போது ஒற்றுமையோடும் மிகுந்த விசுவாசத் தோடும் வளர்ந்து வருகின்றது.

**க. அருமைநாயகம்**
**பொருளாளர்.**

# திருச்சபைத் திருப்பணி

மூளாய்த் திருச்சபை தனது 125ம் ஆண்டு நிறைவை நினைவு கூரும் இந்தக் காலப்பகுதியில் மூளாய்த் திருச்சபையின் தற்போதைய நிலை வரத்தை வரலாற்றுப் பார்வையிலும் இறையியற் பார்வையிலும் சிந்திப்பது பொருத்தமானதாக அமையும் என்று நினைக்கின்றேன்.

## 01. அங்கத்தவர்கள்

மூளாய் திருச்சபையைப் பொறுத்தவரையில் மிக பழமைவாய்ந்த அடித்தளத்தை அது கொண்டுள்ள போதிலும் அதன் அங்கத்தவர்கள் அநேகர் நாட்டுச் சூழ்நிலை காரணமாகத் தூரதேசங்களுக்குக் குடிபெயர்ந்து விட்டனர். எனினும் கடவுள் நாள்தோறும் சபையினில் தனது பிள்ளைகளை இணைத்து வருகின்றார். அந்த வகையில் தற்போது சபையில் அங்கத்துவமாய் இருக்கும் குடும்பங்களின் விபரம் வருமாறு.

**01.** **திரு. க. அருமைநாயகம்**

**02.** **திருமதி இ. தவநாயகம்**
**த. டினூஷா**
**த. சில்வியா**
**திருமதி செ. தர்மரட்ணம்**

**03.** **திரு. பா. இராசு**
**திருமதி இ. யோகேஸ்வரி**
**இ. கஜீபன்**
**இ. யஜீபன்**
**இ. கஜீபன்**

**04.** **திரு. ச. சின்னையா**
**திருமதி சி. புஸ்பமலர்**
**சி. தர்சினி**
**சு. சுதா**
**சி. சுரேஸ்**
**சி. சுதர்சினி**

05. திருமதி பா.நாகம்மா
பா. அழகேஸ்வரி

06. திருமதி.செ.நாகமணி
நா.ஜெயா
நா.ஜெசிந்தன்

07. திரு.சீ.மனோகரன்
திருமதி ம.நந்தினி
ம. திவேனியா

08. திரு.மா.குலசிங்கம்
திருமதி கு.பூமாதேவி
கு.பிரகலாதன்
கு.கோபாலநந்தினி

09. திரு.வை. ஜெகதீஸ்வரன்
திருமதி ஜெ.பவாநந்தினி

10. திரு.வை.கார்த்தியேசு
திருமதி கா.சரசு

11. திரு.ப.கிருஷ்ணமூர்த்தி
திருமதி கி.அகிலாண்டேஸ்வரி
கி.தமயந்தி
கி.சித்திரா
கி.திலீபன்
கி.சுபாசினி
கி.சின்னவன்
கி.லக்ஷன்
கி.கஜன்

12. திரு.சி.செல்லையா
திருமதி செ.திலோத்தமை
செ.றெசிதா
செ.தனுஜா
செ.நிமலதாஷன்
செ.சிந்துசலோமியா

13. திரு. ந.பூபாலசிங்கம்
திருமதி பூ.கலைமகள்
பூ.சக்கிலா
பூ.மேனகா
பூ.றதிஸ்னா
பூ.கருணாகரன்
பூ.கிருஷ்ணா

14. செ.தவப்பிரசாதன்
த.நிஷாந்தினி

15. திரு.வ.நாகரத்தினம்
திருமதி நா.கலாராணி
நா.கிறேசினி
நா.நிறோஷன்

16. திருமதி செ.சின்னத்தம்பி
சி.பாக்கியம்
சி.சசிக்குமார்
சி.வில்சன்
சி.டனிஸ்ரா
சி.செல்வக்குமார்
சி.மெடிஸ்ரன்
சி.றெஜினா
சி.ஜெபின்
சி.இங்கர்சாள்ஸ்

17. திரு.க.அருளாநந்தன்
திருமதி அ.மகேஸ்வரி
அ.இரட்ணாகிரி

18. திரு.இ.செந்திலக சிறீராஜேஸ்வரன்
திருமதி செ.கிருஷ்ணவேணி
செ.ஜெனஸ்ரீபன்
செ.ஸ்ரீபன்
செ.றஜீபன்

19. திரு.து.தவனேஸ்வரன்
திருமதி த.பத்மராணி
த.நிமல்ராஜ்
த.நிரோஜ்
த.நிக்ஷனா
த.நிக்ஷன்

20. திரு.க.ஜெயக்குமார்
திருமதி ஜெ.பொன்மலர்
ஜெ.றதிஸ்
ஜெ.றஜீபா
ஜெ.றஜிதா
ஜெ.றஜி
ஜெ.தூயவன்
ஜெ.துஷ்யந்தன்

21. திரு.ஏ.சத்தியராஜன்
திருமதி யோய் மலர் சத்தியராஜன்
ஜோன் சத்தியரஞ்சித்
கிரோஸ் தர்சினி

22. திருமதி ஆர்.சத்தியராணி
ஆர்.ஜெயராஜன்

## 02. வழிபாடு



திருச்சபையின் வழிபாடு என்பது, அதுவே சபையின் உயிர்மூச்சாக இருக்கின்றது. அந்தவகை யிற் சபையின் ஞாயிறு தோறும் காலை 8 மணிக்கு ஞாயிறு ஆராதனை நடைபெற்றுவருகின்றது. மாதத்தின் முதலாவது ஞாயிற்றுக்கிழமை திருவிருந்து வழிபாடாக நடைபெறும். அத்தோடு விசேட வழிபாடுகளான கிறிஸ்து வருகைக் கால வழிபாடுகள், கிறிஸ்து உயிர்ப்புகால வழிபாடுகள் யாவும் சிறப்போடு நடைபெற்று வருகின்றது. வழிபாட்டிற் சபையாரின் பங்களிப்பு விசுவாசத்தோடும், பக்தியோடும் உள்வாங்கப்படுகின்றது.

**01. ஆலயம் அலங்காரம்**
**02. காணிக்கை சேகரித்தல்**
**03. வேதாகமம் வாசித்தல்**
**04. விசேடப்பாடல் பாடுதல்**
**05. மன்றாட்டுச் செபம் செய்தல்**

போன்ற காரியங்களிற் சபையார் பக்தியோடு வழிநடத்தப்படுகிறார்கள்.

## 03. ஓய்வுநாட் பாடசாலை



திருச்சபையின் செல்வங்களாகத் திகழ்ந்துவரும் பிள்ளைகளைக் கடவுளுக்குள் வழிநடத்துவதற்கான ஒரு சிறப்பான திட்டமாக ஓய்வுநாட் பாடசாலை நடாத்தப்பட்டு வருகின்றது.

ஓய்வுநாட் பாடசாலையின் அதிபராகச் செல்வி S. தர்சினி அவர்களும் ஆசிரியர்களாகத் திருமதி சுதர்ஜினி யோசுவா, செல்வி தனுஜா செல்லையா, இரசு சுஜீபன், செல்வி A. இரட்ணாகரி ஆகியோர் சிறப்பான முறையிற் கடமையாற்றி வருகின்றார்கள்.

**04. வாலிபர் பணி**



திருச்சபையின் வாலிபர்களைத் திருப் பணியின் அங்கமாகச் செயற்படுத்துவதற்கான சரியான திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இளைய சமூகத்திற்கெனச் சமுதாயம் அமைப்பிற் கவர்ச்சிகரமான செயல் வடிவங்களைத் தாண்டித் திருச்சபை வாலிபர்களை ஆதாயப்படுத்திக் கொள்ள, ஆவிக்குரிய அனுபவங்களை வழங்க முயற்சி செய்கின்றது. எனினும் மாறிவரும் சூழ்நிலையிற் பொருளாதாரத்தின் இலக்கை நோக்கி மட்டுமே வாழ்க்கைச் சக்கரம் சுழல்கின்ற வட்டத்திற்குள் வாலிப சமூகம் தள்ளப்பட்டு இருப்பதால் அதன் மிகுந்த பக்தியோடும் ஜெபத்தோடும் அந்தத் திட்டத்தைச் செயற்படுத்துகின்றோம்.

**செயற்பாடுகள்**

1. கூட்டு ஜெப நாட்கள் - திங்கள் - சனி மாலை 5.00 மணி முதல் 6.00 மணிவரை.
2. வாராந்தக் கலந்துரையாடல் - ஞாயிறு மாலை 4.00 மணிவரை
3. மாதாந்தத் திருமறை ஆய்வு - போயா நாட்கள் மாலை 4.00 மணி முதல் 6.00 மணி வரை. அத்தோடு விசேட ஒன்று கூடல்கள், மற்றும் விசேட விழாக்கள்.

வாலிபர் சங்கத்தின்
தலைவராக - S. செல்வக்குமார்
செயலாளர் - S. தர்சின்
பொருளாளர் - A. இரட்ணகிரி

ஆகியோர் சிறப்பாகக் கடமையாற்றி வருகிறார்கள்.

## 05. பெண்கள் சங்கம்



கிறிஸ்துவின் சாட்சிகளாகப் பிரகாசிக்கவும், அவருடைய நற்செய்தியின் தூதர்களாகவும் இருக்கின்ற பெண்கள் திருச்சபையின் தூண்களாக இருக்கின்றார்கள். எனினும் இருந்தாலும் ஒன்றுகூடி ஒரு செயலைப் பெண்கள் செய்வதற்கு அவர்கள் இணைக்கப்படக் குடும்பப் பொறுப்புக்கள் அவர்களை விட்டுக் கொடுப்பதில்லை. எனினும் கூடித் தீர்மானிக்கும் விடயங்களைத் தனிப்பட்ட முறையிற் செயற்படுத்துவதிற் சங்கம் ஊக்கமாகச் செயற்படுகின்றது.

**செயற்பாடுகள்**

01. மாதாந்தம் ஜெபநேரம் மாதத்தின் கடைசி வெள்ளி மாலை 5.00 மணிமுதல் 6.30 மணி வரை.

02. வாராந்த சமூகப்பணி: கிராமங்கள் தோறும் சுகாதாரத்திட்டம்.

03. விசேட நிகழ்வுகளில் இறப்பு வழிபாடுகளை ஏறெடுத்தல்.

**நிர்வாகிகள்**

| | |
|---|---|
| தலைவர் | திருமதி யோசுவா சுதர்சினி |
| செயலாளர் | திருமதி கலாராணி |
| பொருளாளர் | திருமதி தனம் பத்துமா |

## 06. சுவிசேடப்பணி

திருச்சபையின் மையமாகத் திகழ்வது கிறிஸ்துவை நற்செய்தி கொடுப்பதாகும். நற்செய்தி அறிவிப்பு இல்லையென்றால் திருச்சபை இறந்து விட்டதாகவே கருதப்படும். அந்தவகையில் மூளாய் திருச்சபையின் நற்செய்திப்பணி சிறப்பாக நற்செய்தி மையங்களாக.

1. சுழிபுரம் சூரியவளவு பகுதி
2. சுழிபுரம் ஆனந்தநிலையப் பகுதி
3. தொல்புரம் கிழக்குப் பகுதி

இவ் விடயங்களிற் சிறப்பு ஓய்வு நாட் பாடசாலைத் திட்டம், விசேட இல்லச் சந்திப்புக்களும், செபக்கூட்டங்களும், தனிநபர் சுவிசேடப் பணிகளும் சிறப்பாக நடைபெறுகின்றது. இந்தப்பணிகள் என்னோடும் எனது மனைவியோடு செல்வி தர்சினி அவர்கள் மிகுந்த உற்சாகமாய் ஈடுபட்டு வருகின்றார்.

**இல்லந்தோறும் திருமுறைப்படிப்பு**

திருச்சபை மக்களுக்கான திருமறை அறிவை வழிப்படுத்த அவர் களை ஆலயத்திற்கு அழைத்து திருமறைப்படிப்பிற் பங்குகொள்ளச் செய்யமுடியாத நிலையில் வாராந்தம் ஒவ்வொரு இல்லத்திலும் தொடர்ச்சியான ஒரு திருமறை படிப்பு ஒரு வாரத்திற்கு இரண்டு இல்லங்கள் எனும்படி நடாத்தி வருகின்றோம். இந்த விடயத்தில் வேறு மார்க்கத்தாரும் சுவிசேட சங்கதிகளை ஆவலாய் கேட்டும் விவாதித்தும் வருகிறார்கள்.

**இல்லச் செபக்கூட்டங்கள்**

இல்லசெபக் கூட்ட இல்லங்களின் விசேட நாட்களை மையமாக வைத்து இல்லக்கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அந்த வகையில் வாராந்த செபக்கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறிய திருப்பணிகள் யாவும் நான் திருச்சபையைப் பொறுப் பெடுத்த குறுகிய காலப்பகுதியில் ஒழுங்கமைத்துக் கிறிஸ்து எனக்கு தந்த பெலத்திலும் வழிநடத்தலிலும் செய்து வருகின்றோம்.

**திருச்சபை ஊழியன்**



# திருச்சபையும் சபையாரும்

(வண. என். சுப்பிரமணியம்)

திருச்சபையிற் சபையாரின் (Layment) பங்கென்ன? என்ற கேள்வி இந்நாட்களில் திருச்சபை வட்டாரங்களில் அடிக்கடி எழுப்பப்பட்டு வருகிறது. அத்தோடு ஊழியருக்கும் சபையாருக்கும் திருச்சபையோடுள்ள தொடர்பைப் பற்றியும், இன்று சபைகளிற் போதிய ஊழியரில்லாதமையால், சபையார் எந்தெந்தச் சபை வேலைகளைச் செய்ய முடியுமென்பதைப் பற்றியும் சிந்தித்து ஆராய்ந்து வருகின்றனர். அனைத்துலகச் சபைகள் மன்றமும், திருச்சபையில் சபையார் பெறவேண்டிய இடத்தைப் பற்றி ஆராய்வதற்காக ஒரு குழுவை நியமித்துச் செயல்புரிந்து வருகிறது. கடந்த நவம்பர் மாதம் புதுடெல்லியிற் கூடின உலகத் திருச்சபைகள் மன்றத்தின் மூன்றாம் பேரவையிலும் திருச்சபை யிலும் உலகத்திலும் சபையார் எடுக்கவேண்டிய பங்கென்ன என்பதைப் பற்றி, அத்தியட்சர் ஒட்டோ டை பெலியஸ் (Bishop Otto Dibelius) அவர்களின் தலைமையில் ஆராய்ச்சியும் கலந்துரையாடலும் நடைபெற்றது.

'சபையார்' அல்லது "லெயிற்றி" (Laity) என்ற பதத்திற்கு, இன்னும் தெளிவானதும் திட்டவட்டமானதுமான கருத்துக் கொடுக்கப்படவில்லை. ஜெர்மன் தேச சபைகளில், இறையியல் (Theology) பயிற்சிபெறாத யாவரும் சபையார் (Laymen) என அழைக்கப்படுகின்றனர். கிரேக்க வைதீக சபைகளில், குருமாரல்லாத யாவரும் "சபையார்" என அழைக்கப் படுகின்றனர். இந்தமுறையையே கீழ்த்தேசச் சபைகளில் அநேகம் வழங்கி வருகின்றன.

இது நிற்க, இன்று உலகம் முழுவதும் "நற்செய்தி" பரப்ப வேண்டுமேயாகில், இதனை மிஷனெரிமாரும் போதகர்மாரும் மட்டும் செய்து முடிக்கமுடியாது. சபையாரும் இதில் ஈடுபட வேண்டியதவசியம். ஊழியரும் சபையாருஞ் சேர்ந்து உழைத்தால்தான், திருச்சபை பெருக்கமடையும். இன்று பெரும்பாலான சபையார், "ஞாயிறு கிறிஸ்தவ வாழ்க்கையையே வாழ்வதில் திருப்தியடைந்திருக்கின்றனர். தமது கிறிஸ்தவ வாழ்க்கையைக் கிறிஸ்தவர்களல்லாதார் மத்தியிற் சாட்சியாக வாழவேண்டுமென்பதை அவர்கள் உணர்வதேயில்லை. இதனால்தான் நமது சபைகள் முன்னேற்ற மடையாது வளராமல் இருக்கின்றன. இதனைச் சபையார் கவனிப்பது நல்லது.

நமது சபைகளில் இன்று பணவருவாய் குன்றிவிட்டது. ஊழியருக்கு வேண்டிய ஊதியம் கொடுக்கமுடியாத பரிதாபகரமான நிலையிற் சபைகள் இருக்கின்றன. அத்தோடு நமது சபைகளிற் போதிய ஊழியருமில்லை. இப்பிரச்சினைகளை நாம் எவ்விதம் தீர்க்கலாமெனச் சிந்திப்போமேயாகில், சபையார் தமது உத்தரவாதத்தைக் காணவேண்டிய அவசியத்தை நாம் காணமுடியும். நமது சபைகளில் நல்லனுபவம் வாய்ந்தவர்களும், கிறிஸ்தவ செல்வாக்கைச் செலுத்திப் பலரின் நன்மதிப்பைப் பெற்று வருகிறவர்களு மான பலருளர். இவர்கள் சபைக் காரியங்களில் ஈடுபடுவதோடு, சபைகளின் பொறுப்பையேற்று நடத்தத்தக்க இயல்பையும் பெற்றிருக்கின்றனர். இப்படிப் பட்டவர்களைச் சபை தெரிந்தெடுத்துப் பாவித்து வரல்வேண்டும். அப்போது, சபையின் வேலைகள் பங்கப்படாது தடையின்றிச் செய்யப்பட்டுவரும். இப்படிப்பட்ட சபையாரைத் தெரிந்தெடுத்து இவர்களுக்குக் குரு அபிஷேக முங்கொடுத்துச் சபைவேலைகளில் ஈடுபடவிட்டால், இம்முறை திருச்சபையின் வளர்ச்சிக்கு உறுதுணையாயிருக்குமென்பதில் ஐயமில்லை. இதனால் ஊழியர் இல்லாத பிரச்சனையும் பெருமளவில் தீர்ந்துவிடும். அதே சமயத் தில், முழுநேர ஊழியத்திற்காக நன்கு பயிற்றப்பட்ட ஊழியர் தேவை யில்லையெனத் தவறாக நாம் கருதப்படாது. இவ் விதமாகப் பயிற்றப்பட்ட ஊழியர் சபைகளுக்கு முக்கியமாகத் தேவையென்பதை நாம் மறுக்க முடியாது. இருந்தும், சபை வேலைகள் தடையின்றி விரைவாகச் செய்யப்படுவதற்கு, முன் குறித்த முறையைக் கையாளுவது நல்லதென்றே நாம் எண்ணுகிறோம். மேலும், ஒவ்வொரு சபை நிர்வாகக் குழு உறுப்பினரும், தமது சபை வட்டாரத்தைப் பகுதி பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு உறுப்பினரும் ஒவ்வொருபகுதிகளிலுமுள்ள சபையாரின் குடும்பங்களைச் சந்தித்து விசாரித்து வருவார்களேயாகில் இதன் மூலமாகவும் சபைவேலை பெலப்படும் என்பதே எங்கள் நம்பிக்கை. இவ்விதமான சபை வேலை களுக்கு 40 - 50 வயது வரையிலுள்ள அனுபவம் வாய்ந்த சபையாரைத் தெரிந்தெடுப்பது திருச்சபையின் கடமையாகும். தென் இந்தியாவிற் கடமையாற்றிய அத்தியட்சர் உவைற்ஹெட் என்பவர் அக்காலத்தில் தனது சபையாரில் ஒருவரான அசரையாவை சபைவேலைக்காகத் தெரிந் தெடுத்ததின் ஞானத்தை, சில ஆண்டுகட்குப் பின்னர் அதே அசரையா தோர்ணக்கல் அத்தியசராய்ப் பெரும்பணிகள் புரிந்ததின் மூலம் காண்கி றோம். திருச்சபையானது உண்மையாகத் தனது தேவையை உணர்ந்தால் அத்தியட்சர் அரசையாவைப் போன்ற திருப்பணியாளரைப் பரிசுத்தாவி யானவரின் வழிநடத்துதல் மூலம் கண்டுபிடிக்க முடியும்.

இன்று நமது சபையார், சபை வட்டாரங்களில் மட்டும் தமது வாழ்க்கையை நடத்துவதில் திருப்தி கொள்ளாமல், உலகத்திற்குள்ளே புகுந்து, தாமிருக்குமிடத்தில் தமது விசுவாசத்தில் உறுதியடைந்த கிறிஸ்து வின் சிந்தைக்கியைந்த வாழ்க்கையை வாழ வேண்டும். இதுவே ஒரு சாதாரண ஓய்வுநாள் ஆராதனையிலும் பார்க்க வல்லமை நிறைந்த சாட்சியாய் விளங்கும். தீவிரமாக மாற்றமடைந்துவரும் நமது சமதாயத்திற் சபையார் கிறிஸ்தவ செல்வாக்கை ஏற்ற முறையிற் செலுத்தும் வாழ்க்கையை வாழவேண்டியது அத்தியாவசியமாகிறது. இவ்விதச் சூழ்நிலையிற் சபையார் தமது உத்தரவாதத்தை உணர்ந்து, தமது உன்னத அழைப்பை மறவாது ஒழுகுவார்களேயாகில், அநேகர் இதன்மூலம் நமதாண்டவரின் திருவடிகளையடைவதற் கேதுவாயிருக்கும்.

இன்று திருச்சபை, உலகில் நாளாந்தம் நடைபெறும் தீவிர மாற்றங்களுக்கேற்ற முறையில் திருப்பணி புரிய வேண்டுமேயாகில், சபையாரும் குருமாரும் திருச்சபையுடன் வெவ்வேறு பணிகளில் எவ்விதம் ஒருவருக்கொருவர் உறுதுணையாயிருத்தல் வேண்டுமென்பதையும் ஆழ்ந்து சிந்தித்துச் செயல்புரிய வேண்டும். நாமெல்லாரும் நமது ஆண்டவரின் உடன் ஊழியக்காரர். அவரின் முன்னிலையிற் சபையார், குருமார் என்ற வேறுபாடில்லை. அவரின் திராட்சைத் தோட்டத்தில் ஊழியஞ் செய்வதற் காகவே நாம் அழைக்கப்பட்டுள்ளோம் என உணர்ந்து, நமது வேலைகள் வெளிப்புறத்தில் வெவ்வேறாயிருந்த போதிலும், நாம் ஆண்டவரின் ஊழியர் என்பதை மறவாது ஒன்றுபட்டு ஒருமனதுடன் ஊழியஞ் செய்ய முன் வருவோம்.

**"நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவ னுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களிலே, ஆவிக்குரிய சகல ஆசீர் வாதத்தினாலும் உங்களை ஆசீர்வதிக்கிறார்."**

**எபே. 15:2, 3.**

**(வண. என். சுப்பிரமணியம்) மூளாய் திருச்சபையில்
ஊழியனாக இருந்தபோது உதயதாரகை பத்திரிகைக்கு
எழுதிய கட்டுரை இது**

# முன்னாள் ஊழியனின் வாழ்த்து



மூளாய் திருச்சபை தனது 125வது ஆண்டு நிறைவைக் கொண்டாடு வதையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இத் திருச்சபை யாழ். ஆதீனத்தில் சரித்திரத்தில் முக்கியமான ஒரு திருச்சபையாகும். எமது மதிப்புக்குரிய பேராயர் அதிவணக்கத்துக்குரிய கலாநிதி S.ஜெபநேசன் அவர்களும் சகோதரரும் சிறு பிராயத்திற் கடவுளைக் குறித்த அறிவை இத்திருச்சபை வாழ்விலிருந்தே பெற்றனர். பேராயரின் தந்தை காலஞ் சென்ற சுப்பிரமணியம் போதகரை, மூளாய் திருச்சபை என்றுமே மறக்க முடியாது. அவர் இத்திருச்சபையைக் கட்டி எழுப்பினார். பெண்கள் சங்கம், வாலிபர் சங்கம், ஒய்வுநாட் பாடசாலை போன்ற பணிகளில் அதிக கவனம் செலுத்தியவர் என்பதில் ஐயமே இல்லை.

இளம் ஊழியர்களை வரவேற்று அவர்கள் பணியைச் செய்வதற்கு இத்திருச்பை ஊக்கத்தையும் வழிநடத்தலையும் கொடுத்தது. அருள்திரு.A ஜெயக்குமாரனும் நானும் பணியை முதன் முதலிலே இத்திருச்சபையில் ஆரம்பித்தது மாத்திரமல்ல. திருமணம் செய்து முதன்முதலாக நாங்கள் இத்திருச்சபையிற் பணிசெய்ததும் குறிப்பிடத்தக்கது.

இத்திருச்சபையின் தூண்களாக விளங்கின..... ஜோசப் மாஸ்டர் அவர் துணைவியார், காலஞ்சென்ற தர்மரட்ணம் அவர் பாரியார், திரு. அருமைநாயகம் ஆகியோரை எண்ணிப் பார்க்கிறேன். அவர்கள் ஊழிய ருக்குக் கொடுத்த ஒத்துழைப்பையும் உற்சாகத்தையும் எண்ணிப் பார்த்து இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

எமது ஆதீனத்திற் பணியாற்றித் தற்போது அவுஸ்ரேலியாவில் Australia பணிபுரியும் அருள்திரு.சுப்பிரமணியம் N.சுகுணானந்தன் மூளாய் திருச்சபைக் குருமனை திருத்துவதற்காக 200,000/- அன்பளிப்புச் செய்துள்ளார். இவர் மேலும் ஊழியர் மூளாய் குருமனையில் இருந்து பணியாற்றுவார்களேயானால் மேலும் பணம் தரக் காத்திருக்கிறார். அவருக்கும் அவர் பிள்ளைகளுக்கும் மூளாய்த் திருச்சபை சார்பிலும் எமது பேராயர் ஆதீனம் சார்பாக நன்றியை கூறிக்கொள்கின்றேன்.

இவ்வாண்டிலும் இனிவரப்போகிற ஆண்டிலும் கடவுள் உங்களோடு இம்மானுவேலாக இருந்து வழிநடத்துவாராக.

**Rev.S.C. ஆனல்ட்**

# என் நினைவில் மூளாய் திருச்சபை



மூளாய் திருச்சபை தனது 125 ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

திருச்சபை வளர்ச்சிப் படிகளில் 125 ஆவது ஆண்டு நிறைவு என்பது எம் எல்லோராலும் வாழ்த்தப்பட வேண்டியதொன்றாகும். நாட்டில் ஏற்பட்ட பல பிரச்சனைகளுக்கும் முகங்கொடுத்து எமது சபையானது திடத்துடனும் பலத்துடனும் இருப்பதற்கு வெளிநாடுகளில் வாழ்ந்துவரும் எம் திருச்சபை அங்கத்த வர்களின் சேவை அளவிடற்கரியதாகும். இது பாராட்டப்பட வேண்டிய தொன்றாகும்.

எனது காலத்தில் திருச்சபை வரலாற்றில் மூன்று பேராயர்களைச் சந்தித்துள்ளேன். பேராயர் அதிவண.சபாபதி குலேந்திரன், பேராயர் அதிவண.கலாநிதி D.J. அம்பலவாணர், பேராயர் அதிவண கலாநிதி. S.ஜெபநேசன். இவர்கள் எம் திருச்சபை வளர்ச்சிப் பாதையில் நல் வழிகாட்டிகளாவர்.

மூளாய்த் திருச்சபை வரலாற்றிற் காலத்திற்கு காலம் இறைபணி யாற்றிய ஊழியர்கள் வாழ்த்தப்பட, போற்றப்பட வேண்டியவர்கள். அவர்களின் வழிநடத்தலில் திருச்சபை மக்கள் முன்னேற்றப்பாதையிற் சென்றுள்ளனர் என்பது கண்கூடு.

எமது முன்னாள் பேராயர் அதிவண. கலாநிதி S.ஜெபநேசன் அவர்களின் தந்தையார் வண.N.சுப்பிரமணியம் அவர்கள் போதகராகக் கடமையேற்று குருமனையிற் குடும்பமாக இருந்து வழிநடத்தியதிற் சபையானது சிறந்த முறையில் வளர்ச்சி பெற்றதை நான் நன்கு அறிவேன். இக்காலத்தில் திருமதி ஹரிசின்னமா இமானுவேல், திரு.S.J.கந்தையா குடும்பம், திரு.S. யோசப் குடும்பம், திரு.S. பொன்னையா குடும்பம், திரு.K தர்மரத்தினம் குடும்பம், திரு.K.அருமை நாயகம் குடும்பம், திரு.K.பாலசுந்தரம் குடும்பம், திரு.J.மயில்வாகனம் குடும்பம், திரு.S.சுப்பையா குடும்பம் போன்றோர் என் மனக்கண்முன் என்றும் உள்ளனர். இவர்கள் திருச்சபை வரலாற்றிற் பொறிக்கப்பட வேண்டியவர்கள்.

1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நாட்டுப் பிரச்சனையாற் பல குடும்பங்கள் நாட்டைவிட்டுப் புலம்பெயர்ந்ததனால் திருச்சபை வெளிநாட்டு அங்கத்துவர் கூடுதலாகவும் சபையில் திருமதி A.R.யோசேப், திரு.K.தர்மரத்தினம் குடும்பம், திரு.K.அருமைநாயகம் குடும்பம், திரு.T. தவநாயகம் குடும்பம், திரு.K.ஜீவானந்தன் குடும்பம், திரு.A.சத்தியராசன் குடும்பம் ஆகியோருடன் திருச்சபை தனது பணிகளை ஆற்றிக்கொண்டு வந்தது. 1991 ஆம் ஆண்டு மேலும் சில குடும்ப அங்கத்தவர் புலம் பெயர்ந்தனர். திருச்சபையின் அங்கத்தவர்களாகத் திரு.K.தர்மரத்தினம் குடும்பம், திரு.K.அருமை நாயகம் குடும்பம், திரு.த.தவநாயகம் குடும்பம் ஆகியோருடன் திருச்சபையின் பணிகள் தொடர்ந்தது.

1995 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட இடப்பெயர்வினால் திருச்சபை அங்கத்தவர் சிலரை இழந்து நின்றது. நீண்ட காலமாகச் செயலாளராகக் கடமையாற்றிய திரு.K.தர்மரத்தினம் அவர்களும் 1997 ஆம் ஆண்டு திரு.T.R.தவநாயகம் அவர்களும் மறுமைக்குள் பிரவேசத்தின் காரணத் தால் திருச்சபை அங்கத்தவர் (உள்நாட்டு) பட்டியலிற் குறைந்த அங்கத் தினரே காணப்பட்டனர். அவ்வரிசையில் திருச்சபை அங்கத்தவர்களாக விருந்த திரு.திருமதி அருமைநாயகம், திருமதி S.தர்மரத்தினம், திருமதி. I.தவநாயகம், குடும்பம், செல்வி. B. நந்தினி, செல்வி. B.அழகேஸ்வரி, திரு. A.சத்தியராசன் குடும்பம் ஆகியோருடன் சபை பணியாற்றி வந்தது.

2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆந் திகதி நடைபெற்ற ஆதீனசங்கக் கூட்டத்தின் தீர்மானத்திற்கு இணங்க தொல்புரம் திருச்சபை மக்கள் மூளாய்த் திருச்சபை அங்கத்தவர்களாகச் சேர்க்கப்பட்டனர். நீண்ட இடைவெளிக்குப்பின் திருச்சபையின் குருமனை வண.S.சுகுணானந் தன் அவர்களின் 200,000 ரூபா அன்பளிப்பினாலும், ஆதீனத்தின் நிதியுதவியினாலும், புனர்நிர்மாணம் செய்யப்பட்டு இன்று பொலிவுற்றுவிளங்கு கின்றது. வண.S.சுகுணானந்தன் அவர்களுக்கும், ஆதீனத்திற்கும் எம் திருச்சபை மக்கள் சார்பில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் வெளிநாடுகளில் வாழ்ந்து வருகின்ற எம் திருச்சபை அங்கத்தவர்களான திரு.திருமதி P.சுப்பையா, திரு.T.யோகேந்திரன் குடும்பம், திரு.T.ஞானேந்திரன் குடும்பம், திரு.T.தவேந்திரன் குடும்பம், திரு.J ஜீவானந்தன் குடும்பம், திரு.S.ஆறுமுகம் குடும்பம் ஆகியோர் காலத்துக்குக் காலம் நிதியுதவிகளை வழங்கி வருகின்றனர். இவர்களுக்கும் எம் மனநிறைவான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எம் திருச்சபை ஊழியர் வண.T.S யோசுவா போதகருக்கு திருமதி பாரியா யோசுவர், அவர்களது பாரியாருக்கும் திருச்சபை சார்பில் நன்றி கூறுகின்றேன். மேலும் வயது முதிர்ந்த காலத்திலும் பொருளா ளராகக் கடமையாற்றி வருகின்ற திரு.K.அருமைநாயகம் அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக 125 ஆவது ஆண்டு நிறைவினைக் காணவைத்து, நாள்தோறும் உற்சாகம் தந்து சோரவிடாமல் தனது செட்டையின் கீழ் வழிநடத்திவரும் ஆண்டவருக்கும் ஸ்தோத்திரம்.

" இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினால் எங்கே கூடியிருக்கின்றார்களோ, அங்கே அவர்கள் நடுவில் இருக்கின்றேன்."

மத்தேயு 18:20

**திருமதி இந்திரா தவநாயகம்,**
மூளாய்த் திருச்சபைச் செயலாளர்.
20.02.2005



வண.என் சுப்பிரமணியம்
திருமதி கனகம்
சுப்பிரமணியம்
ஞாபகார்த்தமாக
அவர்களுடைய மூத்த
குமாரன் வண.
எஸ்.அருணானந்தன்
அவர்களின் உதவியால்
மின்புனரமைப்பு செய்யப்பட்ட
நமது குருமனையை நமது
பேராயர் எஸ்.ஜெபநேசன்
திறந்து வைக்கின்றார்.

# டாக்டர் எம். ஓ. சாக்கோ

1955ம் ஆண்டு மே மாதம் சாவகச்சேரியிலிருந்து நமது பெற்றோரின் குடும்பம் மூளாய்க்குப் புலம்பெயர்ந்தது. ஆசிரியர் பதவி வகித்த எமது தந்தையார் வேலூரில் ஒருவருடப் பயிற்சியை முடித்து விட்டு மூளாய் ஊழியனாகப் பொறுப்பேற்றார். மூளாய் வைத்தியசாலையும் யாழ்ப்பாணக் கல்லூரியும் தமது புகழின் உச்சத்தில் நின்றன.

எம்மை வரவேற்று உபசரித்த மூளாய் மக்களில் மிகவும் முக்கியமானவர் டாக்டர் சாக்கோ. அப்பொழுது அவர் மூளாய் வைத்தியசாலையில் வைத்திய அதிகாரி (எம்.எஸ்) டாக்டர் சாக்கோ நாம் குடிபுகுந்த குருமனையைக் கவனமாகப் பார்த்தார். எட்டு வருடங்களாக மூளாயில் ஊழியன் இருக்கவில்லை. வீடு பாழடைந்திருந்தது. சபையார் அதனை மிகவும் பிரையாசப்பட்டுத் திருத்தியிருந்தார்கள். டாக்டர் சாக்கோ ஒவ்வொரு அறையாகப் பார்த்தார். சமையல் அறையையும் பார்த்தார். அது மிகவும் பதிவான கொட்டிலாகவிருந்தது. "தூண்களை எழுப்பிக் கூரையை அப்படியே உயர்த்தி விட்டாலென்ன?" என்று கேட்டார்.

டாக்டர் சாக்கோ நாம் மூளாயிலிருந்த காலமெல்லாம் அன்பான வைத்தியனாகவே இருந்தார்.

ஞாயிறு ஆராதனை மற்றும் லெந்து, கிறிஸ்மஸ் ஆராதனைகள் ஆகியவற்றிற்கு யார் வராவிட்டாலும் சாக்கோ வந்துவிடுவார். தாம் மட்டுமன்றி மூளாயிலிருந்த மலையாளப் பெண் வைத்தியர், கிறிஸ்தவ தாதிமார் எல்லாரையும் தமது காரில் ஏற்றிக்கொண்டு வந்துவிடுவார். பிரசங்கத்தை மிகவும் ஆவலோடு கேட்டார். வீடுகளில் வைக்கப்படும் ஜெபக் கூட்டங்களுக்கும் வந்துவிடுவார்.

சாக்கோ தலைசிறந்த வைத்திய நிபுணர். அத்துடன் மிகவும் பக்தி நிரம்பிய கிறிஸ்தவர். காலையில் அவருடைய வீட்டிற்குச் சென்றால் மலையாள வேதம், பாட்டுப் புத்தகம், ஜெபப் புத்தகம் என்பனவற்றை முன்னால் வைத்துத் தானே தனக்கு ஒரு வழிபாடு நடத்திக் கொண்டிருப்பதனைக் காணலாம்.

ஆலயத்திற்கு வந்தால் முதலாவது ஆசனத்தில் இருப்பார். ஒருநாள் எனது தந்தையார் பிரசங்கம் செய்யும்பொழுது பிரசங்க பீடத்திலிருந்து கடதாசியொன்று விழுந்துவிட்டது. எவரும் எடுக்கமுன் அவரே விரைந்துசென்று கடதாசியைப் பொறுக்கிப் பிரசங்க பீடத்தில் வைத்தார்.

கேரள தேசத்தில் இருந்துவந்த இந்த அன்பர் தன்னந்தனியனாகவே மூளாயில் வாழ்ந்தார். அப்பொழுது அவர் மனைவி இறந்துவிட்டார். என நினைக்கின்றேன். யாழ்ப்பாணக் கல்லூரியின் மலையாள ஆசிரியர்களுடன் நெருங்கிய உறவு பூண்டு வாழ்ந்தார்.

ஒருமுறை எமது வீட்டில் ஒருவருக்கு கடும் சுகவீனம் ஏற்பட்டது. சாக்கோ அவர்களே கட்டில் அருகில் நின்று ஜெபம் செய்துவிட்டு நோயாளியைத் தமது காரில் ஏற்றி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார்.

இந்தச் சம்பவங்கள் நடைபெற்று ஏறத்தாழ அரைநூற்றாண்டு கழிந்துவிட்டது. சாக்கோவின் கம்பீரமான தோற்றமும் அவர் பாவித்த பியட் காரும் என் கண்முன் இப்பொழுதும் நிற்கின்றன.

“**தெய்வ நல்லருள் படைத்த அன்பரோடு**
**கூடவுமட் நல்லருள் கூர்வையே**” என்றார் தாயுமானவர்.

டாக்டர் சாக்கோவின் அப்பழுக்கற்ற பக்தி வாழ்க்கை, என் இளமைப் பராயத்தில், விசுவாசம் உறுதிபெற உதவியது.

1960ம் ஆண்டு வரை யாழ்ப்பாணத்தில் பெரும் மகான்களும், அறிஞர்களும் பணியாற்றினார்கள். கேரளத்தில் இருந்துவந்த மத்தாய், சாக்கோ, டாக்டர் சூசன், ஜோர்ஜ் போன்றவர்கள் நமது பிரதேசத்தின் வளர்ச்சிக்கு ஆற்றிய சேவை மகத்தானது. இவர்களுக்கெல்லாம் தலைவரைப்போன்று விளங்கியவர் டாக்டர் சாக்கோ. இவ்பொழுது அவருடைய மக்கள் அமெரிக்காவுக்குச் சென்றுவிட்டனர் என்று அறிந்தேன். அவருடைய மக்களில் ஒருவர் இப்பொழுது மிகவும் முதுமையடைந்து விட்டார். உதயதாரகையை மிகவும் கவனமாகப் படித்து வருகின்றார்.

சாக்கோவின் மருமகன் டாக்டர் பென்ஜமின் இப்பொழுது பெங்களூரில் வாழ்ந்து வருகின்றார். அவரும் முதுமையடைந்து விட்டார். ஆனால், யாழ்ப்பாணம் என்றால் அவர் மனதில் இன்பப் பெருக்கோடுகின்றது. யாழ்ப்பாணத்தைப் பற்றி அறிவதில் மிகுந்த ஆர்வமுடையவராய் இருக்கின்றார்.

நினைவில் நின்றவர்கள் வரிசையிலே சாக்கோ என்ற அன்பான பக்தனை முதலாவதாக நினைவு கூருகின்றேன்.

தற்கால வாலிபர்களுக்கு இப்படியான மகான்களைக் காண வாய்ப்பு இல்லை. இதுவே இன்றைய பிரச்சனைகளுக்கு முக்கிய காரணம்.



திருச்சபையின் மூத்தோர்



பொருளாளர் க.அருமைநாயகம்


திருச்சபையின் நிர்வாக சபை

# நன்றி நவிலல்

நூற்று இருபத்தைந்து ஆண்டுகள் பழமை வாய்ந்த மூளாய்த் திருச்சபை தனது பணிகளைச் செய்து சுடர் வீசிக் கொண்டிருப்பதற்காய் எம் முன்னோரையும், ஆண்டவரின் பாதத்தண்டை சேர்ந்தோரையும், முன்னர் பணியாற்றிய பேராயர்களையும், குருமார்களையும் நினைத்து ஆண்டவருக்கு நன்றி கூறுகின்றேன்.

திருச்சபை தனது 125 ஆவது மலரினை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைவதுடன் அதற்கு ஆக்கமும், ஊக்கமும் வழங்கிய சபைக் குருவானவர் வண. பிதா. ரி.எஸ். யோசுவா குடும்பத்தினருக்கும் எனது நன்றிகள்.

எம் திருச்சபையினது ஆலய புனருத்தாரன வேலைகளை மன முவந்து செய்துதவிய எம் திருச்சபை உறுப்பினர்களை நினைவு கூரக்கடமைப்பட்டுள்ளேன்.

அமரர்களான திருமதி தங்கம்மா கந்தையா, திருமதி கிறேஸ் பூமணி அருமைநாயகம் ஆகியோரின் ஞாபகார்த்தமாக திரு. க. அருமைநாயகம் குடும்பத்தவரால் பலிபீட மேசையும், பலிபீட அமைப்பும், புனருத்தாரணம் செய்யப்பட்டது. அவர்களுக்கு எனது நன்றி.

அமரர்களான திரு. கந்தையா தர்மரத்தினம், திரு. தர்மரத்தினம் புவீந்திரன் ஆகியோரின் ஞாபகார்த்தமாக திருமதி செ. தர்மரத்தினம், திரு. த. யோகேந்திரன் குடும்பம், திரு. த. ஞானேந்திரன் குடும்பம், திரு. த. தவேந்திரன் குடும்பம் ஆகியோரால் மின் விசிறி வழங்கப்பட்டது. அவர்களுக்கும் எனது நன்றி.

அமரர் திரு. தம்பிநாயகம் றொபேட் தவநாயகத்தின் ஞாபகார்த்தமாக திருமதி இ. தவநாயகம் குடும்பத்தினரால் அலங்கார மின்விளக்கு வழங்கப்பட்டது. இவர்களுக்கும் எனது நன்றி.

அமரர் திரு. இ.பாலன் அவர்களின் ஞாபகார்த்தமாக திருமதி பாலன் நாகம்மாவினால் பேராயர் ஆசனம் வழங்கப்பட்டது. அவர்களுக்கும் எனது நன்றி.

மேலும் ஒரு அலங்கார மின் விளக்கு திருமதி பிறேமினி யோகராசா அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. அவருக்கும் எனது நன்றி.

அடுத்து ஆலயத்திற்கான திரைச்சேலை திருமதி பத்மராணி, திரு. திருமதி சின்னையா, திருமதி பா. நாகம்மா ஆகியோரால் வழங்கப்பட்டது. அவர்களுக்கும் எனது நன்றி.

ஆலய வெள்ளை அடிப்பதற்கு பணவுதவி வழங்கிய திருமதி பா. நாகம்மா, திரு. K. அருளானந்தம், திருமதி சி. பாக்கியம், திருமதி சி. திலோத்தமை, திருமதி கு. கலாராணி, திரு. இ. ராசு, திருமதி சரசு கார்த்திகேசு, திரு. க. அருமைநாயகம் ஆகியோருக்கும் எனது நன்றி.

மேலும், வெளிநாட்டில் வாழ்ந்து வரும் சபை உறுப்பினர்களும் காலத்துக்கு காலம் வழங்கிய பல்வேறு உதவிகளுக்கும் எம் திருச்சபை சார்பில் நன்றி. திருச்சபை அங்கத்தர்களுக்கும் மலரினை அச்சிட உதவியவர்களுக்கும் நன்றி.

இறுதியாக எம் பேராயர் பேரருட் கலாநிதி எஸ். ஜெபநேசன், பேராயரம்மா திருமதி விமலா ஜெபநேசன் ஆகியோருக்கும் எமது உளமார்ந்த நன்றிகள். எமது குருமனை மீள் புனருத்தாரணம் செய்வதற்கு பணவுதவி புரிந்த முன்னாள் திருச்சபை சேகரக் குரு வண பிதா. எஸ். சுகுணானந்தன் குடும்பத்தினருக்கும் எம் மனமார்ந்த நன்றிகள்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக 125 ஆவது ஆண்டு நிறைவினைக் காண வைத்து வழிநடாத்திக் கொண்டிருக்கும் ஆண்டவருக்கு மேலான நன்றியைக் கூறுகின்றேன்.

**திருமதி இந்திரா தவநாயகம்**
**முன்னாள் திருச்சபைச் செயலாளர்.**

**நமது திருச்சபையில் பணி புரிந்த ஊழியர்கள்**

வண.எஸ்.ஜோன்
(1880-1897)
திரு.ஏ.கந்தையா (1906-1910)
வண.எஸ்.ரி.தோமஸ்
(1910-1917) இவர்களுடைய
படங்கள்
கிடைக்கவில்லை



**Rev.E.Hastings**
**1906-1908**



***வண. R.C.P. உவெல்ச்***
***சேகரப் போதகர் 1921-1926***



***திரு. K.P. வேதநாயகம்***
***1923-1926***




**Rev.J.Sinnathamby**
**1925**



**Rev.E.T.Williams**
**1926-1931**



**Rev.E.T.Asirvatham**
**1935-1939**



Rev.G.D.Thomas
1918-1921




வண. J.M. சிங்கநாயகம்
1941-1947



திரு. J. C. கனகரத்தினம்
1947-1951



Rev.J.J.Ratnarajah
1847-1950




Rev.A.C.Thambirajah
1947-1950



Rev.E.K.Yesuthason,
1939-1943



வண. K.E. தம்பிராசா
1931-1932



வண. D.R. அம்பலவாணர்
1954-1955



வண.என்.சுப்பிரமணியம்
1955-1963



வண.எம்.தேவதாசன்
1984-1988



திரு.எஸ்.மாணிக்கம்
1979-1983



வண.எஸ்.சி.ஆனல்ட்
1975



வண.ஏ.எ.போல்
1991-1995



வண.ஏ.ஜெயக்குமாரன்
1975, 1988-1991



வண.பி.தேவதாஸ்
1997-1999



வண.ஜி.நடராஜா
2002-2004



வண.டி.சி.ரட்ணசிங்கம்
1999-2001



திரு.ஏ.ஜெயானந்தன்
2002



வண.ஏ.பி.புனிதராஜா
1996-1997

